

# தமிழ் இலக்கியங்களில்
## அறமும் அருளும்


தொகுதி 1

























பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. மகாலட்சுமி
திருமதி சுகந்தி நாடார்
முனைவர் இலட்சுமி கார்மேகம்



தமிழ்த்துறை (அரசு உதவி), என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001

# தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள் : முனைவர் ஆ. மகாலட்சுமி
திருமதி சுகந்தி நாடார்
முனைவர் இலட்சுமி கார்மேகம்

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : ஜனவரி, 2019

வெளியீடு : தமிழ்த்துறை (அரசு உதவி)
என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி - 642 001.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்
476 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : XVIII + 380 - 398

விலை : உரு. 400/-

ISBN : 978 - 93 - 87009- 50 - 9

# Ethics and Devotion in Tamil Literature

(International Conference)

Editors : Dr. A. Mahalakshmi
Miss. Suganthi Nadar
Dr. Lakshmi Karmegam

Copyrights : Editors

First Edition : January, 2019

Published by : Department of Tamil
N.G.M. College
Pollachi - 642 001.

Computer : Prdag Print, Coimbatore - 29.

Printing at : Prdag Print
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : XVIII + 380 - 398

Prize : Rs. 400/-

# பொருளடக்கம்


1. முனைவர் பே. மஹேஸ்வரி
கம்பராமாயணத்தில் வாழ்வியல் அறம் — 1

2. அ. மகபூபூ
திருக்குறள் திருக்குர்ஆன் காட்டும் அறநெறிகள் — 7

3. செ. மகேஸ்வரி
திருவள்ளுவர் கூறும் அறமும் அருளும் — 11

4. அ. சண்முகவேல்
தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள் — 16

5. அ. நித்யா
புறநானூற்றில் அறம் — 21

6. அ. செந்தில் குமார்
வள்ளுவரின் அறத்துப்பாலில் அறம் — 25

7. பா. அந்தோணியம்மாள்
தமிழ் இலக்கியத்தில் அறம் — 30

8. ஆ. தென்னரசு
பெரும்பாணாற்றுப்படைவழி விருந்தோம்பலில் அறம் — 35

9. ஹெலன் ரீட்டா. ஆ
குண்டலகேசியில் அறச்சிந்தனைகள் — 39

10. ஆர். கிருஷ்ணவள்ளி
வையவன் படைப்புகளில் பெண்ணிய சிந்தனைகள் — 45

11. க. ராஜ்மோகன்
நச்சினார்க்கினியர் உரையில் முருகனின் பெருமைகள் — 49

12. இரா. கதிரேசன்
பொருநராற்றுப்படையில் அறம் — 53

13. பேராசிரியர் கந்தையா அருந்தவராஜா & மங்களரூபி சிவகுமார்
இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாண சமூகத்தில் சாதிமுறைமை — 57

4. முனைவர் ந. இராசேந்திரன்
இற்செறித்தல் மற்றும் உடன்போக்கு - அறமும் அறமின்மையும் — 64

உ. மணிமேகலை
தமிழ் இலக்கியங்களில் அருள்நெறி — 69

அ. சிவபாக்கியம்
அறமும் பொருளும் — 72

2

# திருக்குறள் திருக்குர்ஆன் காட்டும் அறநெறிகள்

**அ. மகபுபூ**
உதவிப்பேராசிரியை
என்.ஜி.எம்.கல்லூரி
பொள்ளாச்சி.

கடவுள் மனிதனுக்காக படைத்தது பகவத்கீதை “மனிதன் கடவுளுக்காக படைத்தது இராமாயணம்” மனிதன் மனிதனுக்காக படைத்தது திருக்குறள். தமிழர் உலகத்திற்க்கு தந்த பெருஞ்செல்வம் பதினெண்கீழ்கணக்கு அறநூல்களில் ஒன்று மனித இனத்திற்கு அறம் சொல்லும் ஒப்புயர்வற்ற நூல். மனிதகுலம் ஈன்ற மேதைகளில் வள்ளுவர் ஒருவர் என்று குரல் கொடுக்கும். தெய்வமறை பொதுமறை உத்தரவேதம் தெய்வநூல் போன்ற சிறப்புப்பெயர்களை கொண்ட வானம் அளந்தனைத்தும் அளந்திடும் வண்மொழியாகத் தமிழ்மொழிக்கு வாழ்வளித்த அறிவுக் களஞ்சியம்.

## திருக்குறள் எல்லா சமயத்திற்க்கும் பொதுவானது

திருக்குறள் அனைத்து சமயத்தினருக்கும் அறம் கூறும் பொதுமறை. ஐவதிகர் பௌத்தர் சமணர் சைவர் வைணவர் என்றில்லாமல் மனிதர்கள் அனைவருக்கும் அறங்களை வகுத்தமையாள் தோன்றியழிந்த சமயத்திற்கும் இனித்தேன்றும் சமயங்கற்கும் அந்நூல் புறம்பாய் தோன்றாதது திருக்குறள் ஓர் வாழ்வியல் நூல் இந்நூலினை “வழிபடு நூலென ஒதுவதோடமைந்தும் இன்ப நூலென அகவை முதிர்ந்தார்க்கென வரைதும் மொழித நூல் வள்ளுவமன்று” என்று சிற்பி அவர்கள் கூறுகின்றார் (த.இ.வ-) எந்நாட்டவரும் எவ்வினத்தவரும் எவ்வினத்தவரும் எவ்வகையினரும் கற்க அமைந்த பொது நெறியது திருக்குறள்

**“ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்**
**போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்-ஏட்டெழுதி’**

வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச் எனக் கோதமனார் திருக்குறள் எல்லாவற்றிக்கும் பொருந்தும் எனபதைச் சொல்லுவர்

## திருக்குறளும் திருக்குர்ஆனும்

திருக்குறளோடு ஒப்பிடத்தக்க மிகச்சில திருமறைகளில் திருக்குஆன் குறிப்பிடத்தக்கது. இறைவனின் கடைசித் தூதராகிய நபிகள் நாயகத்தின் (முகம்மதுர் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மீதாக இறக்கி வைத்த மறைமொழிகளின் தொகுப்பே திருக்குர்ஆன். ஹிரா மலையின் இருண்ட குகைகளில் பெருமானார் தவம்புரிந்தபோது தெய்வீகப் பேரொளி அங்குத் தோன்றியது “உங்களின் பொருட்டாக ஒரு தீர்க்கதரிசியை

அனுப்புவேன்" என்று ஆதியாகமத்தில் (16:20)கூறியபடி இ தனது திருத்தூதராகப் பெருமானாரைத் தேர்ந்தெடுத்து எழுதப் தெரியாத அவர்மீது திருக்குர்ஆனை இயக்கி வைத்து ஓதப் ப

குர்ஆனின் பல சிறப்புளுள் ஒன்று அ்.து இந்நாள்வ இடைச்செருகலும் இல்லாமல் இருப்பது "முகம்மதே இது ஒரு வே இதனை உம்மீது நாம் இறக்கியுள்ளோம். மக்களை அவர்க இறைவனின் உதவி கொண்டு இருளிலிருந்து வெளியேற்றி ஒளியி நீர் கொண்டுவர வேண்டும் என்பதற்காக"(14:12) என்று அவ் கூறுகின்றது. குர்ஆன் அற்புங்களைச் செய்துகாட்டி மக்களை வேண்டும் என்ற கருத்துடையதில்லை எதார்த்தங்களை உண்மை சிந்திக்கவே தூண்டுகின்றது

## திருக்குர்ஆனின் இறைக் கொள்கை

திருக்குர்ஆன் ஒரே இறைக்கொள்கையை உடையது. "இறை ஒருவனே்அவ்விறைவனுக்கு இணை வைத்து யாரையும் கூறாத் வணக்கத்திற்குரியவர் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை" என் அதன் அடிப்படைக் கொள்கை அரபிமொழியில் "இலாஹ்" என்பத கடவுள் என்று பொருள். அல்-இலாஹ் என்பதே அல்லாஹ் ஆயிற்று. வணகத்திற்குரிய இறைவன் என்பது இதன் பொருள எல்லா வல்லவனாகிய இறைவன் தூதர்களாக நபிமார்கள் இருந்த

குர்ஆன் நபிமார்களைக் குறிகையில். "நபிமார்கள் வானவர்கள இருந்ததில்லை" என்று கூறுகின்றது. அதாவது அவர்க மனிதர்களாகவே இருந்தனர் என்பது பொருள். ஆல்லாஹ் அவதா எடுப்பதோ மனித உருவில் வருவதோ இல்லை என்றும். திரும தெளிவுறுத்துகின்றது. திருவள்ளுவரும் இறைவனை எல்லார்க்கு மேலானவனுமாகவும் எல்லாம் கடந்தவனுமாகவும் காண்கிற "இறைவன் பொருள்சேர் புகழ்" என்பதே "எல்லாப் புகழு இறைவனுக்கே" என மலர்ந்துள்ளது.

## மறுவாழ்வு(அ)மறுமை

மனிதன் நற்பண்புகளைக் கொண்டவனாக வாழவேண்டு என்பதையே திருக்குறளும் திருக்குர்ஆனும் உரைக்கின்றன மறுமையைப் பற்றி இரண்டுமே கூறுகின்றன.

**"ஒவ்வொரு மனிதனும் மரணத்தைச் சுவைக்க வேண்டியிருக்கிறது**
**இணக்கமான சூழ்நிலையிலும் இணக்கமற்ற சூழ்நிலையிலும் யாவுமே மனிதனுக்குச்**
**சோதனையாய் இருகின்றன" 16:35(477)**
**"மரணத்தின் வேதனை ஏற்படும்போதே உண்மை என்ன என்பது**
**தெளிவாகும்" 50:19(882)**

என்று அல்லாகுவின் திருவாசகங்கள் உள்ளன.திருவள்ளுவர் இதனை

*"நாச்செற்று விக்குள்மேல் வராமுன் நல்வினை*
*மேற் சென்று செய்யப்படும்" 335*

ன்கிறார் நற்பண்பு மிக்கவர்களை மறுமை உலகம் விரும்பி ஏற்கும் ன்பதை இரு மறைகளும் கூறுகின்றன

*"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*மேற் சென்று செய்யப்படும்." 86*

'நல்ல மனிதர்கள் இறைவன் முன்னிலையில் விருந்தினர்களாக ஒன்று திரள்வர். மேலும் குற்றவாளிகள் தாகம் கொண்டவர்களா நரகத்தை நோக்கி ஒட்டிச் செல்லப்படுவார்கள்" 19:85-86

திருகுர்ஆன் சொர்கம் நரகம் ஆகியன எப்படி இருக்கும் என்பதை மிக விரிவாகக் கூறுகின்றது நரகத் தண்டனைகளையும் துறக்க நற்பேறுகளையும் குர்ஆன் எடுத்துரைக்கின்றது திருக்குறள் இவற்றை விவரிக்கவில்லை.

**வழிபாடு(அ)தொழுகை**

திருக்குர்ஆன் தொழுகை வழிபாடு ஆகியவற்றை மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றன.

"காலை முதல் இரவு வரை உள்ள ஐந்து வேளைகளில தொழுகையை நிலை நாட்டுங்கள்"11:114(419)

"சூரியன் உச்சி சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் வரையில் தொழுகையை நிலை நாட்டுங்கள்"17:78(506)

திருவள்ளுவரும் வழிபாட்டை தொழுதல் என்ற சொல்லையே பயன்படுத்த காண்கிறோம்.

*"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்".2*

என்று கூறுகின்றார்.

இரு மறைகளும் தீய குணங்களைக் கொள்ளாதிருக்க அறிவுறுத்துகின்றன. திருக்குறள் சூதுஇகள்ளுண்ணாமை என்ற அதிகாரங்கள் வழியாகக் கூறும் அறம் திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது.

*"மதுவும் சூதாட்டமும் சைத்தானின்*
*அருவருக்கத்தக்க செயல்களாகும்." (256)*

வெகுளாமைஇசெருக்கின்மை அழுக்காறின்மை பிறர் பொருளை அவாவாமை சுற்றம் தழுவுதல் பயனில சொல்லாமை ஆகிய பண்புகள் இரு மறைகளிலும் ஒற்றுமையுறக் கூறப்பட்டுகின்றன. பண்பாடும் நாகரிகமும் மிக்க சமுதாய உருவாக்கமே இரு நூல்களின் நோக்கமாக உள்ளது பேச்சில் ஒழுங்கு கண்ணியம் நாகரிகம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க இரு நூல்களும் வற்புறுத்துகின்றன.

*"எனைத்தும் குறுகுதல் ஓம்புமின் மனைக்கெழீஇ*
*மன்றில் பழிப்பார் தொடர்பு"* 820

*"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்*
*பண்புள பாடறிவார் மாட்டு."* 995

என்ற கருத்துக்கள் குர்ஆன் மறையிலும் மிளிர்கின்றன.

பொய்யாமை என்பவற்றின் மேன்மையைக் குர்ஆன் கூறுகி சமயப் பெருஞ்சான்றோர்களான கௌதம புத்தர் மகாவீரர் இயேசு முகம்மது நபி ஆகிய யாவரும் வாய்மை பிறழாதவர்களா விளங்கியுள்ளனர். சமயங்கடந்த பொதுமை நெறி நின்ற திருவள்ளு பொய்யாமையை அறங்களில் மிகச் சிறந்ததாகக் கூறுகின்றார்.

*"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று"* 297

*"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்*
*வாய்மையின் நல்ல பிற"* 300

இவ்வாறாக பல இடங்களில் திருக்குர்ஆனும் திருக்குறளும் மனிதனை நல்வழிப்படுத்துகின்றன.